






# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

தலைமைக் கழகம்

எண் : 15, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 28481235

டிடிவி தினகரன்

பொதுச்செயலாளர்


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி : 22.12.2024

## தலைமைக் கழக அறிவிப்பு

## ஒருங்கிணைந்த திண்டுக்கல் மாவட்டம்

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகப் பணிகளை விரைவுப்படுத்திடும் வகையில் திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு என கழக அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் மாவட்டக் கழகங்கள் இன்று முதல் **"திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்", "திண்டுக்கல் மத்திய மாவட்டம்"** மற்றும் **"திண்டுக்கல் மேற்கு மாவட்டம்"** என கீழ்கண்டவாறு பிரிக்கப்பட்டு அதற்குண்டான சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கி செயல்படும்.

### திண்டுக்கல் மேற்கு மாவட்டம்

1. ஒட்டன்சத்திரம் சட்டமன்றத்தொகுதி
2. பழனி சட்டமன்றத்தொகுதி
3. வேடசந்தூர் சட்டமன்றத்தொகுதி

### திண்டுக்கல் மத்திய மாவட்டம்

1. ஆத்தூர் சட்டமன்றத்தொகுதி
2. திண்டுக்கல் சட்டமன்றத்தொகுதி

### திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

1. நிலக்கோட்டை சட்டமன்றத்தொகுதி
2. நத்தம் சட்டமன்றத்தொகுதி

**திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் பொறுப்பில்**

**திரு.K.P.நல்லசாமி** அவர்கள்,

(திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளர்)

**திண்டுக்கல் மத்திய மாவட்ட கழக செயலாளர் பொறுப்பில்**

**திரு.A.கோவிந்தன்** அவர்கள்,

(திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர்)

**திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பொறுப்பில்**

**திரு.K.செல்வம்** அவர்கள்,

(வத்தலகுண்டு தெற்கு ஒன்றியக் கழக செயலாளர்)

இன்று முதல் நியமிக்கப்படுகிறார்கள்.

இதுவரை திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் பொறுப்பிலிருக்கும் திரு.R.செல்வபாண்டி அவர்கள் அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறார். அவர் வகித்துவரும் கழக இதயதெய்வம் அம்மா தொழிற்சங்கப் பேரவை செயலாளர் பொறுப்பில் தொடர்ந்து செயலாற்றுவார்.

மேலும், திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் பொறுப்பிலிருக்கும் திரு.A.கோவிந்தன், வத்தலகுண்டு தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் பொறுப்பிலிருக்கும் திரு.K.செல்வம் ஆகியோர் அவரவர் வகித்துவரும் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள்.

கழக அமைப்பு ரீதியாக தற்போது மறுசீரமைக்கப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு உட்பட்ட அனைத்து நிர்வாகிகளும், கழக உடன்பிறப்புகளும், சம்மந்தப்பட்ட மாவட்ட கழக செயலாளர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்கி கழக பணிகளை ஆற்றிடவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். கழகம் மற்றும் சார்பு அமைப்புகளுக்கு நிர்வாகிகள் நியமனம் செய்யப்படும் வரை, தற்போதுள்ள நிர்வாகிகள் சம்மந்தப்பட்ட மாவட்டத்திற்கு உட்பட்ட நிர்வாகப் பொறுப்பில் தொடர்ந்து செயலாற்றுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டிடிவி தினகரன்**